மரியாதை...

1.சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோனின் பிறந்த நாளையொட்டி, சென்னை எழும்பூர் ரயில் நிலையம் அருகே அமைந்துள்ள அவரது சிலைக்கு மரியாதை செலுத்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர். 2. அழகுமுத்துக்கோன் சிலைக்கு மரியாதை செலுத்திய அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி. உடன், கட்சியின் மூத்த நிர்வாகிகள். 3. மரியாதை செலுத்திய பாஜக தலைவர் கே.அண்ணாமலை.

சங்கரன்கோவிலில் ஆடித் தவசு கொடியேற்றம்

சங்கரன்கோவில், ஜூலை 11: தென்காசி மாவட்டம், சங்கரன்கோவிலில் அமைந்துள்ள அருள்மிகு சங்கரநாராயணசுவாமி கோயிலில் ஆடித் தவசுத் திருவிழா வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கோயிலில் ஆடித் தவசுத் திருவிழா ஆண்டுதோறும் ஆடி மாதம் 12 நாள்கள் நடைபெறும். நிகழாண்டு திருவிழா வியாழக்கிழமை தொடங்கியது. இதையொட்டி, கோயில் நடை அதிகாலையில் திறக்கப்பட்டு, கொடிப்பட்டம் வீதி சுற்றி கோமதி அம்பாள் சந்நிதி முன்புள்ள கொடிமரத்துக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு கொடிப் பட்டத்துக்கு அபிஷேகம், சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டு, கொடியேற்றம் நடைபெற்றது.

கொடிமரம் தர்ப்பைப்புல், மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பட்டுப் பரிவட்டம் கட்டப்பட்டது. பின்னர், கொடிமர பீடத்துக்கு மஞ்சள், விபூதி, பால், தயிர், இளநீர், தேன், வாசனைத் திரவியம், ஹோமத்தில் வைக்கப்பட்டிருந்த 9 கும்பங்களின் கலசநீர் ஆகியவற்றால் அபிஷேகம் நடைபெற்றது. அதையடுத்து, வேதமந்திரங்கள் ஓத, சிறப்பு தீபாராதனை நடைபெற்றது.

சங்கரநாராயணசுவாமி கோயிலில் கோமதி அம்மன் சந்நிதி முன்புள்ள கொடிமரத்தில் கொடியேற்றத்துக்குப் பின்னர் நடைபெற்ற சிறப்பு தீபாராதனை.

தொடர்ந்து, 9-ஆம் நாளான இம்மாதம் 19-ஆம் தேதி அம்பாள் எழுந்தருளும் தேரோட்டமும், முக்கிய நிகழ்ச்சியான ஆடித் தவசுக் காட்சி 21-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கும் நடைபெறுகிறது.

சட்டப்பேரவைத் தேர்தலில் வலுவான கூட்டணி

எடப்பாடி பழனிசாமி உறுதி

சென்னை, ஜூலை 11: சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையில் வலுவான கூட்டணி அமையும் என்று கட்சி நிர்வாகிகளிடம் பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி கூறினார்.

மக்களவைத் தேர்தல் தோல்வி தொடர்பாக தொகுதி வாரியாக நிர்வாகிகளைச் சந்தித்து எடப்பாடி பழனிசாமி கருத்துகளைக் கேட்டு வருகிறார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் 2-ஆம் நாளாக எடப்பாடி பழனிசாமி, சிவகங்கை, வேலூர், திருவண்ணாமலை ஆகிய தொகுதிகளின் நிர்வாகிகளுடன் வியாழக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

'மக்களவைத் தேர்தலில் அதிமுக வலுவான கூட்டணி அமைக்காததால் தான் அதிமுக தோல்வியைச் சந்தித்தது. சட்டப்பேரவைத் தேர்தலில் வலுவான கூட்டணி அமைக்க வேண்டும்' என்று மூன்று தொகுதிகளின் நிர்வாகிகளும் வலியுறுத்தினர்.

அதற்கு எடப்பாடி பழனிசாமி, 'வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையில் வலுவான கூட்டணி அமையும். அது மக்கள் விரும்பும் கூட்டணியாக இருக்கும். பாஜகவுடன் நிச்சயம் கூட்டணி இல்லை' என்றார்.

வேலூர் தொகுதி நிர்வாகிகள், மூத்த நிர்வாகிகள் சிலர் தேர்தலின்போது சரியாக செயல்படவில்லை என்கிற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். அதற்கு, அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் வெற்றியை ஈட்ட முடியும். இனி இதுபோன்ற விவகாரம் எழக்கூடாது. அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி அறிவுரை கூறியுள்ளார்.

அரக்கோணம், தஞ்சாவூர், திருச்சி ஆகிய தொகுதிகளின் நிர்வாகிகளுடன் வெள்ளிக்கிழமை (ஜூலை 12) எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்த உள்ளார்.

அழகு முத்துக்கோன் பிறந்த நாள்: ஆளுநர் மரியாதை

சென்னை, ஜூலை 11: சுதந்திரப் போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின் பிறந்த நாளையொட்டி, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி மரியாதை செலுத்தினார்.

இதுகுறித்து அவர் சமூக வலைதளப் பதிவில் கூறியதாவது:

சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனை அவரது பிறந்த நாளில் தேசம் நினைவுகூர்கிறது. அசாதாரண வீரம், அடங்காத துணிச்சல், தேசபக்தியின் உண்மையான உருவகமாக அவர் விளங்கினார். பிரிட்டிஷ் காலனித்துவ அடக்குமுறையை உறுதியாக எதிர்த்து, உயிர்த்தியாகம் செய்தார்.

விடுதலை போராட்டத்தின் தீயை மூட்டி எண்ணற்ற மக்களை உற்சாகப்படுத்தினார். நீதி மற்றும் சுதந்திரம் மீதான அவரது ஈடு இணையற்ற அர்ப்பணிப்பு நம் அனைவருக்கும் ஒரு உத்வேகமாக உள்ளது. அவரது நீடித்த பாரம்பரியத்திலிருந்து உத்வேகம் பெற்று, வலிமையான மற்றும் சுயசார்புபாரதத்தை உருவாக்க ஒன்றாகப் பாடுபடுவோம் என்றார் அவர்..

RUDSET Institute
Central Secretariat
UJIRE - 574 240 Karnataka (State), India,
Ph : 08256-236222, Tele Fax : 236982, Mobile No: 98455 87949
Email : rudset@sancharnet.in, Website : www.rudsetitraining.org

NOTICE INVITING TENDERS

Sealed tenders are invited in 2 bids form for the proposed Construction of **Training Institute (RUDSETI) at MADURAI**, Tamilnadu State, from the eligible individuals/institutes/Firms who are fulfilling the qualifying criteria given in tender documents. The details are published in Canara Bank's website **www.canarabank.com** (TENDER) and CPP Portal **www.eprocure.gov.in**. The last date for submission of sealed tenders is **09.08.2024 @ 03:00 PM.** Further communications, corrigendum & amendments, if any, will be hosted in Canara Bank's website only.

Date : 12.07.2024 Sd/ EXECUTIVE DIRECTOR

ரயிலில் ரூ.3.98 கோடி சிக்கிய வழக்கு: பாஜக பொருளாளரிடம் விசாரணை

சென்னை, ஜூலை 11: சென்னையில் ரயிலில் ரூ. 3.98 கோடி பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக பாஜக மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகரிடம் சிபிசிஐடி அதிகாரிகள் விசாரணை செய்தனர்.

மக்களவைத் தேர்தல் நேரத்தில் சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு சென்ற நெல்லை அதிவிரைவு ரயிலில் கொண்டு செல்லப்பட்ட ரூ.3.98 கோடிரொக்கம் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைக்கு ஆஜராகுமாறு பாஜக மாநில பொருளாளரான எஸ்.ஆர்.சேகருக்கு சிபிசிஐடி தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதையடுத்து எஸ்.ஆர்.சேகர், வியாழக்கிழமை காலை 10.40 மணியளவில் சென்னை எழும்பூரில் உள்ள சிபிசிஐடி தலைமை அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் துணைக் காவல் கண்காணிப்பாளர் சசிதரன் தலைமையிலான சிபிசிஐடி போலீஸார் விசாரணை நடத்தினர்.

எஸ்.ஆர்.சேகர் அளித்த பதில்கள் அனைத்தும் வாக்குமூலமாக பதிவு செய்யப்பட்டன. சுமார் 5 மணி நேர விசாரணைக்கு பின்னர், அங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டார். விசாரணையில், வழக்குத் தொடர்பாக பல முக்கியத் தகவல்கள் கிடைத்ததாக சிபிசிஐடி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

SOUTH INDIAN Bank
Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்:
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/37/2024-25 தேதி: 10.07.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட், 2/120, அஞ்சல் பெட்டி எண்.7, ரொங்கநாதபுரம் தெரு, தளவாய்புரம், இராஜபாளையம், விருதுநகர், தமிழ்நாடு-626188.

2) திரு.K.S.ரமேஷ், வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

3) திருமதி.R. அமுதா, வசிப்பிடம் எண். 598, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

4) திரு.K.S. அன்பழகன், வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.

5) திருமதி.A.மீனா, வசிப்பிடம் எண்.36C, பாம்பாளம்மன் கோயில் தெரு, செட்டியார்பட்டி, அய்யன்கொல்லங் கொண்டான், இராஜபாளையம், தமிழ்நாடு-626122.

6) திரு.K.S.செந்தில்குமார், வசிப்பிடம் எண். 1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

7) திருமதி.S.முத்துலட்சுமி, வசிப்பிடம் எண். 1/602, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

8) திரு.K.S.செல்வராஜ், வசிப்பிடம் எண். 1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

9) திருமதி.S.வரலட்சுமி, வசிப்பிடம் எண். 1/656, காமராஜ் நகர், தளவாய்புரம், இராஜபாளையம், தமிழ்நாடு-626188.

தி சௌத் இந்தியன் வங்கி, இராஜபாளையம் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்ளை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 09.07.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், இராஜபாளையம் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.11,81,26,040.89-ஈ (ரூபாய் பதினொரு கோடியே எண்பத்தொரு லட்சத்து இருபத்தாறாயிரத்து நாற்பது மற்றும் பைசா எண்பத்தொன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 02.08.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்	லட்டம் எண் 1: திரு.K.S.ரமேஷ். லட்டம் எண் 2: M/s. E.K.S. ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் லட்டம் எண் 3: திரு.K.S.ரமேஷ்.

சொத்து விபரம்:- லட்டம் எண். 1:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A ஆகியவற்றில் அமைந்துள்ள 5567.50 சதுரடி இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண். 2-ல், 3340.12 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120, 120R, 120B8, 120B10 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து. செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப்பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை. தெற்கே: .K.S.செந்தில்குமாரின் பங்குக் கட்டிடம். கிழக்கே: 2-வது அட்டவணை கட்டிடம் மற்றும் வடக்கு தெற்கு பொதுச்சுவர். மேற்கே: வடக்கு தெற்கு தெரு.

லட்டம் எண். 2:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, அரசியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட. i) சர்வே எண்.51/3-ல் 101 சென்ட். ii) சர்வே எண்.51/2-ல் 86 சென்ட் மற்றும் சர்வே எண்.50/2-ல் கிணற்றின் 2/5வது வலது முதலியன iii) சர்வே எண்.53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் தென்புறமுள்ள 6 சென்ட். iv) சர்வே எண்.52-ல் இருக்கும் 95 சென்ட் இடத்தில் வடக்கிலுள்ள 58 சென்ட் & v) சர்வே எண்.53-ல் இருக்கும் 6.61 ஏக்கரில் வடக்கிலுள்ள 142 சென்ட் என்ற அளவுகளில் அமைந்திருக்கும் 393 சென்ட் (i.e. 101+86+6+58+142 சென்ட்) இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், களங்கப்பேரி பஞ்சாயத்தில் 45137.70 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண்கள். 719, 918, 919, 920, 1334 ஆகியவற்றைக் கொண்ட இண்டஸ்ட்ரியல் கட்டிடத்துடன் அதன் அனைத்து பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான இந்த சொத்து. கீழராஜகுலராமன் சார்பதிவாளர் அலுவலகத்தில் 17.11.1997 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண். 1246/1997 & 20.03.1995 அன்று பதிவுபெற்ற விற்பனைப்பத்திர எண்.291/1995 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள் பின்வருமாறு:

i) 101 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன, தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம். கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. மேற்கே: ரோடு. ii) 86 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: குருசாமி நாயக்கரின் ஈரநிலம் முதலியன மற்றும் குருவய்யா நாடாரின் வறண்ட நிலம். தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் கன்னியப்ப நாடாருக்கு சொந்தமான நிலம். கிழக்கே: குருவய்யா நாடாரின் வறண்ட நிலம். மேற்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1வது அட்டவணை சொத்து. iii) 6 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து. தெற்கே: M/s. EKS ஸ்பின்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்கு சொந்தமான நிலம். கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.1246/1997-ல் உள்ள 1-வது அட்டவணை சொத்து. மேற்கே: ரோடு. iv) 58 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம். தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம். கிழக்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. மேற்கே: விற்பனைப் பத்திர எண்.291/1995-ல் உள்ள 2-வது அட்டவணை சொத்து. v) 142 சென்ட் சொத்தின் எல்லைகள்: வடக்கே: கிருஷ்ணமா ராஜாவின் நிலம். தெற்கே: கிருஷ்ணமா ராஜா, கணேசன் ராஜாவின் நிலம். கிழக்கே: கன்னியப்ப நாடார் மற்றும் பிறருடைய நிலம். மேற்கே: மங்கம்மாள் சாலை.

லட்டம் எண். 3:- விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமத்திற்குட்பட்ட. S.No. 331/1, துணைப்பிரிவின்படி தற்போது புதிய S.No. 331/1A, S.No.333/2, தற்போது புதிய S.No. 333/2A, சர்வே எண். 332/1, தற்போது புதிய S.No. 332/1P ஆகியவற்றில் அமைந்துள்ள 4640 சதுரடி இடத்தின் அனைத்து பகுதிகளுடன், தளவாய்புரம் பஞ்சாயத்து, வார்டு எண். 2-ல், 2156.01 சதுரடி (தோராயமாக) அளவில் கதவு எண். 120B-ஆ கொண்ட குடியிருப்புக் கட்டிடத்துடன் அதன் பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்தும் சேர்ந்து திரு.K.S.ரமேஷ்-க்கு சொந்தமான இந்த சொத்து. செய்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.11.2006 அன்று பதிவுபெற்ற பாகப்பத்திர எண்.2315/2006 & 30.05.2013 அன்று பதிவுபெற்ற திருத்தப் பத்திர எண்.1526/2013 ஆகியவற்றில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: கிழக்கு மேற்கு பொது நடைபாதை. தெற்கே: ராமகந்தரநாடார் கிழக்கு மேற்கு தெரு. கிழக்கே: பொது நடைபாதை. மேற்கே: 1-வது அட்டவணை வடக்கு தெற்கு பொதுச்சுவர்.

நிர்ணயிக்கப்பட்ட தொகை	லட்டம் எண். 1:- ரூ.91,39,000/- (ரூபாய் தொன்னூற்றி ஒன்று லட்சத்து முப்பத்தொன்பதாயிரம் மட்டும்). லட்டம் எண்.2:- ரூ.4,54,27,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து இருபத்தேழாயிரம் மட்டும்). லட்டம் எண்.3:- ரூ.96,97,000/- (ரூபாய் தொன்னூற்றி ஆறு லட்சத்து தொன்னூற்றி ஏழாயிரம் மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	லட்டம் எண். 1:- ரூ.9,13,900/- (ரூபாய் ஒன்பது லட்சத்து பதிமூன்றாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்). லட்டம் எண்.2:- ரூ.45,42,700/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து எழுநூறு மட்டும்). லட்டம் எண்.3:- ரூ.9,69,700/- (ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எழுநூறு மட்டும்).
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/-
இ-ஏல நேரம் மற்றும் தேதி	02.08.2024 அன்று 02.00 PM முதல் 03.00 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்)
வங்கிக்கு தெரிந்த விலைகுறைவுகள்	(லட்டம் எண் 1 -க்காக) 01.01.1987 முதல் 01.12.2022 வரை விலைகுறைவுகள் ஏதுமில்லை. (லட்டம் எண் 2 -க்காக) 01.11.2019 முதல் 08.05.2023 வரை விலைகுறைவுகள் ஏதுமில்லை. (லட்டம் எண் 3 -க்காக) 01.01.2019 முதல் 01.05.2024 வரை விலைகுறைவுகள் ஏதுமில்லை.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட் (Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Mobile No. 9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட் இராஜபாளையம் கிளையின் மொபைல் எண் 8075045551-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்

இந்தியன் வங்கி

விருதுநகர் கிளை

சுவாதீன அறிவிப்பு

(அசையா சொத்துக்காக)

இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் **2002** ன் கீழான, இந்தியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலராகவும், பிரிவு **13(12)** உடன் படிக்க 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் **2002** ன் விதி **8** மற்றும் **9** ன் படி தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தியும், **16.04.2024** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, எமது விருதுநகர் கிளையுடனான கடன்தாரர் **M/s மோடோ சர்வீசஸ், கடன்தாரர் திருமதி.R அனுசுயா,** க/பெ ராமகிருஷ்ணன் (**உரிமையாளர் - M/s மோடோ சர்வீசஸ்**), ஜாமீன்தாரர் திரு ராமகிருஷ்ணன், த/பெ நடராஜன் மற்றும் **ஜாமீன்தாரர் MNR ராம் மொகன்,** த/பெ ராமகிருஷ்ணன் ஆகியோரை அழைத்து, அதில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகை ரூ. **75,32,727/-** (ரூபாய். **எழுபத்து ஐந்து இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து எழுனூற்று இருபத்து ஏழு மட்டும்**) யை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து **60** நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதில் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு **13(4)** மேற்சொன்ன விதிகளில் விதி **8** மற்றும் **9** உடன் படிக்க' வின் படி **2024** ம் வருடம் **ஜூலை** மாதம் **6** ம் தேதியில் சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான வில்லங்கமும், இந்தியன் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை ரூ. **48,34,382/-** (ரூபாய். **நாற்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து முன்னூற்று எண்பத்து இரண்டு மட்டும்**) மற்றும் **15.04.2024** முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

அசையாச்சொத்து விபரம்

விருதுநகர் மாவட்டம் - **626001**, விருதுநகர் நகராட்சி டவுன், வார்டு எண். **1**, ப்ளாக் **1**, டவுன் சர்வே எண்.**21** ல் அமையப்பெற்ற **8280** சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் கட்டப்பட்ட கதவு எண். **149** யைக்கொண்ட கட்டிடம் ஆகியன. **எல்லைகளாவன**

திரு ராமசுப்ரமணியனுக்கு சொந்தமான வீட்டுமனைக்கு - **வடக்கு,**
விமல்ராணி ராமலிங்கத்துக்கு சொந்தமான சொத்துக்கு - **கிழக்கு,**
திரு ராமதாசுக்கு சொந்தமான சொத்துக்கு - **தெற்கு,**
கிழமேலாக செல்லும் வண்டிப்பாதைக்கு - **மேற்கு.**

இடம் : **விருதுநகர்** அதிகாரப்பூர்வ அலுவலர்
தேதி : **06.07.2024** இந்தியன் வங்கி

இந்தியன் வங்கி

விருதுநகர் கிளை

சுவாதீன அறிவிப்பு

(அசையா சொத்துக்காக)

இப்பவும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் **2002** ன் கீழான, இந்தியன் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலராகவும், பிரிவு **13(12)** உடன் படிக்க - 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் **2002** ன் விதி **8** மற்றும் **9** ன் படி தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தியும், **15.04.2024** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, எமது விருதுநகர் கிளையுடனான **கடன்தாரர் திருமதி.R அனுசுயா,** க/பெ ராமகிருஷ்ணன் (**அடமானதாரர்**), **திரு ராமகிருஷ்ணன்,** த/பெ நடராஜன் மற்றும் ராம் ப்ரசாத், த/பெ ராமகிருஷ்ணன் ஆகியோரை அழைத்து, அதில் குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகை ரூ. **48,34,382/-** (ரூபாய். **நாற்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து முன்னூற்று எண்பத்து இரண்டு மட்டும்**) யை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து **60** நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார்.

கடன்தாரர் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர், ஜாமீன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதில் குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன 'சட்டத்தின் பிரிவு **13(4)** மேற்சொன்ன விதிகளில் விதி **8** மற்றும் **9** உடன் படிக்க' வின் படி **2024** ம் வருடம் **ஜூலை** மாதம் **6** ம் தேதியில் சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இச்சொத்துடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், இச்சொத்தின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான வில்லங்கமும், இந்தியன் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை ரூ. **48,34,382/-** (ரூபாய். **நாற்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து முன்னூற்று எண்பத்து இரண்டு மட்டும்**) மற்றும் **15.04.2024** முதல் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

அசையாச்சொத்து விபரம்

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுக்கா, சத்ரரெட்டிபட்டி கிராமம், **MIG-B-16** சர்வே எண். **123,** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் காலனியில் அமையப்பெற்ற கதவு எண். **5/263** யைக்கொண்ட **240** சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் கட்டப்பட்ட கட்டிடம் ஆகியன. **எல்லைகளாவன** கதவு எண். **B17** யைக்கொண்ட வீட்டுக்கு - **வடக்கு,** **D** வகை வீட்டுமனைக்கு - **கிழக்கு,**
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துக்கு சொந்தமான காலி சைட்டுக்கு - **தெற்கு,**
தென்வடலாக செல்லும் **9** மீட்டர் சாலைக்கு - **மேற்கு.**

இடம் : **விருதுநகர்** அதிகாரப்பூர்வ அலுவலர்
தேதி : **06.07.2024** இந்தியன் வங்கி

ந.க.எண்.160/2024/அ1

நகராட்சி அலுவலகம்
கூடலூர், தேனி
நாள்:04.07.2024

2024-2027 ஆம் ஆண்டு குத்தகை சம்மந்தமாக பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சியில் 2024-2027 ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட குத்தகை இனத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் (2024-2025 முதல் 2026-2027) மூன்றாண்டு காலத்திற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ள/ அனுபவித்துக் கொள்ளும் உரிமங்களுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற உள்ளது. அதன்படி குத்தகை தொகை முதலில் ஓ